4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடம் இருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1981).

தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1981).

மேலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 37/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. வரவு-செலவுத் திட்டம் 1981–82—வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத்துறை தொடர்ச்சி

* மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற இந்த மானிய விவாதத் தின்மீது ஏறத்தாழ 19 உறுப்பினர்கள் பங்கு கொண்டு தங்க ளுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அது